மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது தனியான பிரச்னை போல இருக்கிறது. ஆகவே அவர்கள் எழுதித் தருவார்களேயானால் அதைப் பரிசீலிக்கலாம்.

திறமையின் அடிப்படையில் உதவித்தொகை பெறும் மாணவர்களுடைய பெற்றோர்களின் ஆண்டு வருமானத்திற்கான உச்சவரம்பு.

64 (*வினா எண் 21179)—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்குத் திறமையின் அடிப்படையில் (Merit Scholarships) வழங்கும் உதவித்தொகைக்கு அந்த மாணவர்களுடைய பெற்றோர்களின் ஆண்டு வருமான உச்சவரம்பு எவ்வளவு?

(ஆ) இந்த வருமான உச்சவரம்பு எந்த ஆண்டு நிர்ணயிக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ரூ. 6,000.

(ஆ) 1961-62 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட உதவித் தொகைகள் வருகிறபோது அரசுப் பணியிலே இல்லாதவர்கள், வேறு தொழிலிலே இருப்பவர்களும், வியாபாரத்திலே இருக்கிறவர் களும் அவர்களுக்கு வருகிற வருமானத்தை குறைத்துச் சொல்லி இந்த உதவியை பெருமளவில் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1961 ஆம் ஆண்டு இந்த 6,000 ரூபாய் என்று உயர்ந்தபட்ச எல்லை நிர்ணயிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். தற்போது அரசுப் பணியிலே இருக்கிறவர் களுக்கு சம்பளம் உயர்த்தப்பட்டு இருக்கிற நிலையில் ஏராளமான அரசுப் பணியாளர்கள் இந்தச் சலுகையைப் பெறமுடியாமல் இருக்கிறார்கள். ஆகவே 1961 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட இந்த உச்சவரம்பை உயர்த்துவதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பான கல்வித் தகுதி உள்ளவர்களுக்கு, திறமை உள்ளவர்களுக்கு ஒரு திட்டத்தை மத்திய அரசு ஏற்று நடத்திக் கொண்டு வருகிறது. அதேபோல் ஒரு திட்டத்தை நாமும் மேற்கொள்ளலாமா என்று நாம் யோசித்துக் கொண்டு இருக்கிறோம். அதன்படி வருகிறபோது இந்த உச்சவரம்பு இருக்காது.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு தலைவர் அவர்களே, மெரிட் உதவித்தொகையை பொறுத்தவரையில் படிக்கிற மாணவனுடைய தகுதியை வைத்துத்தான் கொடுக்கிறோம். அந்த நிலையில் பெற்றோர்கள் வருமானத்தைப் பார்ப்பது சரிதானா? ஆகவே மறுபரிசீலனை செய்து படிக்கக்கூடிய மாணவர்களுக்கு உற்சாகம் தருகிற வகையிலே மெரிட் அடிப்படையிலே உதவித் தொகை கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அது தனியாக பரிசீலிக்கப்பட வேண்டும். ஆனால் இப்போது அந்த 6,000 ரூபாய் என்பது என்ன என்பதைப் பற்றி ஒரு விளக்கத்தைச் சொல்லிவிடுகிறேன். பெற்றோர்களுடைய அடிப்படை ஊதியம், சிறப்பு ஊதியம் மற்றும் போனஸ் ஆகியவற்றின் கூட்டுத் தொகையில் 20 விழுக்காடு நிலையான கழிவு அனுமதிக்கப்படும். அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி போன்ற படிகள் வருமானத்தைக் கணக்கிட சேர்க்கப்படுவதில்லை. இரண்டாவதாக, மீதமுள்ள தொகையில் பெற்றோர்களது ஊதியத்திலிருந்து மாதந்தோறும் பிடித்தம் செய்யப்படும் பொது வைப்பு நிதிக்கான சந்தாத் தொகை, ஆயுள் காப்பீட்டிற்கான சந்தாத் தொகை, பத்து ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளுக்கு செலுத்தும் சிறு சேமிப்புத் திட்ட சந்தா ஆகியவற்றின் ஓராண்டு கூட்டுத்தொகை அல்லது மேலே 20 விழுக்காடு கழிக்கப்பட்ட பின் எஞ்சிய தொகையில் 30 விழுக்காடு இவற்றிலே எது குறைவோ அது கழிக்கப்படும். இதற்குப் பின்னாலே உள்ள தொகையை ஆண்டு வருமானமாக கணக்கில் கொண்டு அதன் அடிப்படையிலே மாணவர்களுக்கு உதவித் தொகை அவர்கள் பயிற்சி காலம் முடிய வழங்கப்படும். ஆகவே 6,000 ரூபாய் என்று சொல்கிறோமே தவிர உண்மையிலே பார்க்கிறபோது தொகை அதிகமாகத்தான் இருக்கும்.

குறிஞ்சிப்பாடியில் பிணங்களைப் 'போஸ்ட் மார்ட்டம்' செய்ய புதிய கட்டிடம் கட்டும் திட்டம்.

65 (*வினா எண் 18371)—திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறிஞ்சிப்பாடியில் பிணங்களைப் 'போஸ்ட் மார்ட்டம்' செய்ய கட்டிட வசதியில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் அதற்குக் கட்டிடம் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) புதிய கட்டிடம் கட்ட மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.